2015 ஆகஸ்ட் 26]

140—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***53909—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்குத் தொகுதி, சக்கிமங்கலத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை இரண்டாகப் பிரித்து ஆண்டார்கொட்டாரத்தில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆண்டார்கொட்டாரம் கிராமம், சக்கிமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் விவகார எல்லையிலுள்ள ஒரு கிராமம் ஆகும். எனவே, புதிதாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க அதன் விவகார எல்லையில், குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் சாகுபடி நிலப் பரப்பு இருக்க வேண்டும். ஆனால், ஆண்டார்கொட்டாரம் கிராமத்தில் 150 ஏக்கர் சாகுபடி நிலப் பரப்பு மட்டுமே உள்ளது. இருப்பினும், இக்கிராமம், மதுரை மாநகரின் விரிவாக்கப் பகுதியையொட்டி உள்ளதால், இங்கு ஒரு நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதல்வர், விவசாயிகளின் விடிவெள்ளி, தமிழின*

பாதுகாவலர், 1½ கோடி கழகத் தொண்டர்களின் குலவிளக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரை மாவட்டம், மதுரை கிழக்குத் தொகுதி, கிழக்கு வட்டத்தில் அமைந்துள்ள சக்கிமங்கலம் கூட்டுறவுக் கடன் சங்கம் 1952 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தச் சங்கம் தொடங்கப்பட்டபோது, அங்குள்ள 4 ஊராட்சிகளையும் சேர்த்து மொத்தம் 5,000 மக்கள்தொகைதான் இருந்தது. ஆனால், இன்றைக்கு 4 ஊராட்சிகளையும் சேர்த்து மக்கள்தொகை 20,000-ஐத் தாண்டியிருக்கிறது. 4,000 மக்கள்தொகை இருந்தபோது இந்தக் கடன் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைக்கு அந்தச் சங்கம் வளர்ச்சியடைந்து நல்ல முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு யாரும் போகாத நிலையை முந்தைய ஆட்சிக்காரர்கள் உருவாக்கிவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தி, சங்கங்கள் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற அனைத்துத் திட்டங்களின் காரணமாக, அனைத்து மக்களும், விவசாயிகளும் கூட்டுறவுச் சங்கங்களைத் தேடிப் போக வேண்டியுள்ள சூழ்நிலை உருவாகியிருக்கின்றது.

விவசாயிகள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் போக வேண்டுமானால் 7, 8 கிலோ மீட்டர் தூரம் சென்று வாங்க வேண்டிய நிலை இருப்பதனால்தான், மற்ற ஊராட்சிகளெல்லாம் அந்தக் கடன் சங்கத்திற்கு போகாத நிலையிருக்கின்றது. அதனால், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சக்கிமங்கலத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைப் பிரித்து, ஆண்டார்கொட்டாரத்தில் தனியாக வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை அமைத்துக் கொடுத்தால், பக்கத்தில் உள்ள கிராமங்கள் பயன்பெறும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 150 ஏக்கர் நிலம்தான் இருக்கிறதென்று சொல்லியிருக்கின்றார்கள். பக்கத்தில் இருக்கிற கிராமங்கள் எல்லாம் சேர்ந்து அதிகமாக இருக்கும். இருந்தாலும், இந்தக் கோரிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மற்றொரு திட்டத்தையும் அறிவித்தார்கள். கூட்டுறவு urban கடன் சங்கத்தை ஆரம்பித்துத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், இந்தக் கோரிக்கையை ஏழையெளிய மக்களுக்காக வாழ்கின்ற, விவசாயிகளின்

விடிவெள்ளியாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க வேண்டுமானால் நபார்டு வங்கியினுடைய வழிகாட்டுதல் வேண்டும். நபார்டு வங்கியின் வழிகாட்டுதலின்படி, பயிரிடக்கூடிய நிலப் பரப்பு 2,000 ஹெக்டேர் இருக்க வேண்டும். ஏறத்தாழ ஆண்டுக்கு ரூ.2 கோடி அளவிற்கு வணிகக் கடன் கொடுக்க வேண்டும். வெறும் பயிர்க் கடன் மட்டுமல்லாமல், அனைத்து வகைக் கடன்களும் கொடுக்கக்கூடிய அளவிற்கு அந்தச் சங்கம் இருக்க வேண்டும். அதிலிருக்கிற உறுப்பினர்களில் 60 விழுக்காடு உறுப்பினர்கள் அனைத்துக் கடனும் பெறக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால்தான் ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் வருமானம் கிடைக்கும். எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்க முடியும். ஆண்டார்கொட்டாரத்தைப் பொறுத்தளவிற்கு 150 ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. இரண்டாவது, மதுரைக்கு அருகில் இருக்கும் அந்தப் பகுதி, விரிவாக்கப் பகுதியில் வருவதனால், இப்போது பயிரிடப்படும் நிலப்பரப்பு மிகக் குறைவாக இருக்கிறது. கடந்த ஆண்டு சக்கிமங்கலத்தில் இருக்கும் கடன் சங்கத்தில் 34 பேருக்குத்தான் பயிர்க் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதர கடன்கள்தான் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஆண்டார்கொட்டாரத்தில் புதிய வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை. நகர கூட்டுறவுக் கடன் சங்கம் தொடங்குவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 141,*